No. of Printed Pages : 5

**6201**

| பதிவு எண் | | | | | | |
|---|---|---|---|---|---|---|

# பகுதி I — தமிழ் — முதல் தாள்

## (செய்யுளும், இலக்கணமும்)

# Language — Part I — TAMIL — Paper I

நேரம் : **3** மணி ] September 2016 . [ மதிப்பெண்கள் : **100**

அறிவுரை : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிகோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : (i) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் VI-க்கான விடைகள் மட்டும் செய்யுள் வடிவில் அமைத்தல் வேண்டும்.

**I.** பின் வரும் வினாக்களுள் **எவையேனும் நான்கினுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **ஐந்து வரிகளில்** விடை எழுதுக. **4x2=8**

**1.** நாமக்கல் கவிஞர் நாடோறும் எதனைப் பாடுதல் வேண்டும் என்கிறார்?

**2.** ‘ஆய்ந்தவர் கோள்’ - யாது?

**3.** கபிலரைப் புலவர் பெருமக்கள் எங்ஙனம் பாராட்டியுள்ளார்?

**4.** இளந்தாவீதன் எடுத்துச் சென்ற ஆயுதம் யாது?

**5.** துன்பம் எவ்வாறு சிதறிப்போகும் என்கிறார் சுரதா?

**6.** தேவார மூவர் யாவர்?

[ திருப்புக

II. பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றினுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளில்** விடை எழுதுக. 3x4=12

7. கம்பர் 'நன்றே நம்பி குடி வாழ்க்கை' என வியந்து கூறுவதன் நயத்தை எழுதுக.

8. பிறர் கூறும் இன்னாச் சொல்லைப் பொறுப்பவர் எத்தகையவர்?

9. நரிவெரூஉத்தலையார் பயனில்லாத முதுமையுடையாரை விளித்துக் கூறுவனவற்றை எழுதுக.

10. கோவலனைக் கண்ட பொழுது நிகழ்ந்த அற்புதம் யாது?

11. பேழையை மீட்டுத் தருமாறு அன்னம் வேலனை எவ்வாறு வேண்டிக் கொண்டாள்?

III. பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றினுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளில்** விடை எழுதுக. 3x4=12

12. தென்கரை நாட்டின் வளம் குறித்து முக்கூடற்பள்ளு உரைப்பனவற்றை எழுதுக.

13. சுவடிச் சாலையில் இருக்க வேண்டிய நூல்கள் யாவை?

14. பெருமாள் உறை திருவேங்கடப்பதி குறித்துப் பிள்ளைப் பெருமாள் ஐய்யங்கார் கூறுவன யாவை?

15. 'நாயினேன் மறந்து என்னினைக் கேனே' என்று சுந்தரர் உருகுமாற்றினை விளக்குக.

16. சிலுவையிற் பரித்தியாகம் செய்த பெருமானைக் கிருஷ்ணப்பிள்ளை எவ்வாறு அஞ்சலி செய்கிறார்?

IV. பின்வரும் வினாக்களுள் **ஏதேனும் ஒன்றினுக்கு இருபது வரிகளில்** விடை எழுதுக. 1x8=8

17. செய்ந்நன்றியறிதல் பற்றி வள்ளுவர் கூறியுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

18. சீதையை அனுமான் கண்டு வந்து கூறிய செய்திகளைத் தொகுத்து வரைக.

19. பாரதியார் காட்டும் அந்திவான வருணனையைத் தொகுத்து எழுதுக.

**V.** பின்வரும் செய்யுளடிகளின் கீழ்க்கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. **4x1=4**

**20.** '' வெஞ்சின விறல்வேற் காளையொ
டஞ்சி லோதியை வரக்கரைந்தீமே''

(அ) இஃது யார் கூற்று?

(ஆ) இக்கூற்றமைந்த செய்யுளைப் பாடியவர் யார்?

(இ) இப்பகுதி எந்நூலில் இடம் பெற்றுள்ளது?

(ஈ) 'அஞ்சிலோதி' எனக் குறிக்கப்படுபவர் யார்?

**அல்லது**

**21.** ''கடுத்த அவ்வரக்கன் வென்ற சீர்முகத் திளவல்''

(அ) அரக்கன் யார்?

(ஆ) இளவல் - யார்?

(இ) இவ்வடி இடம் பெற்ற நூல் எது?

(ஈ) இந்நூலின் ஆசிரியர் யார்?

**VI. 22.** 'உரைநடையின் சிக்கனந்தான்' - எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதி, அதன் பாவகையையும் எழுதுக. **4+2=6**

**23.** 'அஞ்சுவ' எனத் தொடங்கும் குறளையும் ''மகற்கு'' என முடியும் குறளையும் அடி பிறழாமல் எழுதுக. **2+2=4**

**VII. 24.** **எவையேனும் இரண்டு** சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. **2x2=4**

(அ) இழந்த (ஆ) ஏகுவாய்

(இ) விடல் (ஈ) செய்க

(உ) பட்டேன் (ஊ) வாழ்த்துவம்

**25.** பின்வருவனவற்றுள் **எவையேனும் மூன்றினுக்கு** இலக்கணக் குறிப்பு தருக, **3x2=6**

(அ) கடிமகள் (ஆ) வாயிலும் மாளிகையும்

(இ) கண்ணீர் வெள்ளம் (ஈ) சேவடி

(உ) யார் யார் (ஊ) உயர் எண்ணம்

**26.** **எவையேனும் இரண்டு** தொடர்களைப் பிரித்துப் புணர்ச்சி விதி தருக. **2x2=4**

(அ) நானென்று (ஆ) செம்பொன்

(இ) நிறையுடைமை (ஈ) தீத்தாவும்

(உ) நின்னருள் (ஊ) வண்டுறை

27. சான்று தந்து விளக்கு. 1x4=4

முல்லைத் திணை

அல்லது

பொருண்மொழிக் காஞ்சித்துறை

28. ''உதவி வரைத்தன் றுதவி உதவி 1x4=4

செயப்பட்டார் சால்பின் வரைத்து''.

- இக்குறட்பாவில் அமைந்த அணியைச் சுட்டி விளக்குக.

அல்லது

உவமை அணி அல்லது உருவக அணியை விளக்குக.

VIII. பொருத்துக : 4x1=4

| | திணை | | நிலம் |
|---|---|---|---|
| 29. | குறிஞ்சி | - | வயலும் வயல் சார்ந்த இடமும் |
| 30. | முல்லை | - | கடலும் கடல் சார்ந்த இடமும் |
| 31. | மருதம் | - | சுரமும் சுரம் சார்ந்த இடமும் |
| 32. | நெய்தல் | - | மலையும் மலை சார்ந்த இடமும் |
| | | - | காடும் காடு சார்ந்த இடமும் |

IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 16x1=16

33. கம்பர் காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர் :
(அ) நக்கீரர் (ஆ) ஒட்டக்கூத்தர் (இ) இளங்கோவடிகள்

34. 'வள்ளுவனைப் பெற்றதாற் பெற்றதே புகழ் வையகமே' எனப் பாடியவர் :
(அ) பாரதிதாசன் (ஆ) கவிமணி (இ) பாரதியார்

35. வரி என்பது ____________ வகையது.
(அ) சந்தப்பாடல் (ஆ) கலிப்பாடல் (இ) இசைப்பாடல்

36. திருக்குறளில் அமைந்துள்ள இயல்கள் :
(அ) 4 (ஆ) 9 (இ) 10

37. 'கொன்ஸ்டான்' என்னும் சொல்லுக்குப் பொருள் :
(அ) அஞ்சாதவன் (ஆ) கொன்றவன் (இ) வேற்று நாட்டவன்

38. 'புலன்' என்னும் இலக்கிய வகை :
(அ) கலம்பகம் (ஆ) உலா (இ) பள்ளு

39. மடந்தைப் பருவத்திற்குரிய வயது :
(அ) 8-11 (ஆ) 12-13 (இ) 14-19

40. அன்னத்தின் தோழி :
(அ) கண்ணுக்கினியாள் (ஆ) நீலி (இ) ஆத்தாக்கிழவி

41. புறநானூற்றின் திணைகள் :
(அ) ஐந்து (ஆ) பதினொன்று (இ) பத்து

42. தமிழையும் தெய்வத்தையும் இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்தவர் :
(அ) குமரகுருபரர் (ஆ) பெருந்தேவனார் (இ) சீத்தலைச் சாத்தனார்

43. முதுவேனிற் காலத்திற்கு உரிய மாதங்கள் :
(அ) ஆனி, ஆடி (ஆ) சித்திரை, வைகாசி (இ) மாசி, பங்குனி

44. சிலப்பதிகாரத்திலுள்ள காண்டங்கள் :
(அ) மூன்று (ஆ) ஆறு (இ) முப்பது

45. ''சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே'' என்று பாடியவர் :
(அ) பாரதிதாசன் (ஆ) வாணிதாசன் (இ) பாரதியார்

46. சுந்தரர் தேவாரம் :
(அ) முதலாந்திருமுறை
(ஆ) ஏழாந்திருமுறை
(இ) பன்னிரண்டாந்திருமுறை

47. பதினெட்டு உறுப்புகளால் பாடப்படும் சிற்றிலக்கியம் :
(அ) கலம்பகம் (ஆ) உலா (இ) பள்ளு

48. உலாவில் 'உதியர்' என்ற சொல்லால் சுட்டப்படுபவர் :
(அ) சேரர் (ஆ) சோழர் (இ) பாண்டியர்

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக. 2+2=4

49. தினைத்துணை __________ செயினும் பனைத்துணையாக் __________
பயன்தெரி வார்.

50. மிகுதியான் __________ செய்தாரைத் தாந்தம்
தகுதியான் __________ விடல்.

-oOo-